**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஓ.மு.எண்.5235/ஆ5/2023, நாள்.22.12.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – உருதுமொழி மேம்பாட்டுக்கான தேசிய கவுன்சில் (National Council for Promotion of Urdu Language (NCPUL)) சார்பாக வேலூர் மா வட்டம் – உருது மொழியை மேம்படுத்துவதற்கு உருது மொழி புத்தகங்கள் அடங்கிய வாகனம் கண்காட்சிக்காக வேலூர் மாவட்டத்திற்கு 24.12.2023 அன்று வருகை புரிவது – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.ஆர்1/44256/2023, நாள். 19.12.2023

•••••

பார்வையில் காணும் கடிதத்தில் , வேலூர் வட்டத்தில் செயல்படும் முஸ்லீம் மேல்நிலைப் பள்ளியில் வரும் 24.12.2023 அன்று உருது மொழி மேம்பாட்டு நிறுவனத்தின் (National Council for Promotion of Urdu Language) மூலம் உருது மொழியில் உள்ள தரமான புத்தகங்கள் அடங்கிய கண்காட்சி வாகனம் வரப்பெறவுள்ளது . மேற்படி கண்காட்சியில் உருது மொழி புத்தகங்கள் கண்காட்சிக்காகவும் மற்றும் விற்பனைக்காகவும் வைக்கப்பட உள்ளன . எனவே, உருது மொழி கல்வி பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மேற்காணும் கண்காட்சி குறித்த விவரத்தினை தெரியப்படுத்தி கண்காட்சியில் அதிக அளவிலான மாணவ / மாணவியர்கள் கலந்துக்கொண்டு பயன் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
சார்ந்த உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.
நகல்–
வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.